T1-வடிவியல் மற்றும் செய்முறை வடிவியல்
மாதிரி வினாத்தாள் III

8th Standard

**கணிதம்**

Reg.No. :

# I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

Time : 01:30:00 Hrs                                                                 Total Marks : 35

## பகுதி -அ

10 x 1 = 10

1) கீழ்க்கண்டவற்றில் எவை ஒரு முக்கோணத்தின் கோணங்களாக அமையும்?

(a) 35°, 45°, 90° (b) 26°, 58°, 96° (c) 38°, 56°, 96° (d) 30°, 55°, 90°

2) கீழ்க்கண்டவற்றில் எது சரியான கூற்று?

(a) சமபக்க முக்கோணத்தின் மூன்று கோணங்களும் சமம் (b) இரு சமபக்க முக்கோணத்தின் மூன்று கோணங்களும் சமம்.

(c) மூன்று சம கோணங்களைக் கொண்ட முக்கோணம் சமபக்க முக்கோணம் அல்ல.

(d) அசமபக்க முக்கோணத்தின் மூன்று கோணங்களும் சமம்

3) ஒரு முக்கோணத்தின் இரு வெளிக்கோணங்கள் $130^o$, $140^o$ எனில் மூன்றாவது வெளிக்கோணம்.

(a) 90° (b) 100° (c) 110° (d) 120°

4) கீழ்க்காணும் பக்க அளவுகளில் எது முக்கோணத்தை அமைக்கும்?

(a) 11 செ.மீ., 4 செ.மீ., 6 செ.மீ. (b) 13 செ.மீ., 14 செ.மீ., 25 செ.மீ. (c) 8 செ.மீ., 4 செ.மீ., 3 செ.மீ. (d) 5 செ.மீ., 16 செ.மீ., 5 செ.மீ.

5) இரு சமபக்க முக்கோணம் XYZ ல், XY = YZ எனில் கீழ்கண்ட கோணங்களில் எவை சமம்?

(a) $\angle X$ மற்றும் $\angle Y$ (b) $\angle Y$ மற்றும் $\angle Z$ (c) $\angle Z$ மற்றும் $\angle X$ (d) $\angle X$, $\angle Y$ மற்றும் $\angle Z$

6) $\Delta ABC$ மற்றும் $\Delta DEF$,இல் $\angle B = \angle E$, AB = DE, BC = EF. எனில் இவை __________ அடிப்படைக் கொள்கையின் படி சர்வ சமம்.

(a) ப-ப-ப (b) கோ-கோ-கோ (c) ப-கோ-ப (d) கோ-ப-கோ

7) $\Delta ABC$ இல் $\angle A = 40^o$ மற்றும் AB = AC எனில் ABC _______ முக்கோணம்.

(a) செங்கோண (b) சமபக்க (c) இருசம பக்க (d) அசமபக்க

8) $\Delta ABC$ இல் $\angle A = 90^o$ எனில் கர்ணம் ___________

(a) AB (b) BC (c) CA (d) எதுவுமில்லை

9) $\Delta PQR$ இல் PQ மற்றும் PR ஆல் அடைபடும் கோணம் _______

(a) $\angle P$ (b) $\angle Q$ (c) $\angle R$ (d) எதுவுமில்லை

10) படத்தில் $x^o$ இன் மதிப்பு ________




(a) $80^o$ (b) $100^o$ (c) $120^o$ (d) $200^o$

## பகுதி -ஆ

5 x 2 = 10

11) இரு சமபக்க முக்கோணம், PQR இல், PQ = PR, QP ஆனது S வரை நீட்டப்பட்டுள்ளது. மேலும் PT ஆனது வெளிக்கோணம் SPR = $2x^o$ ன் கோண இரு சமவெட்டி எனில், $\angle Q = x^o$ என நிறுவுக. மேலும் PT || QR என நிறுவுக.

12) ஒரு முக்கோணத்தில் சம கோணங்களுக்கு எதிரேயுள்ள பக்கங்கள் சமம் என்பதை நிறுவுக.

13) கீழ்க்கண்டவற்றில் எவை முக்கோணத்தின் பக்கங்களாகும்?

(i) 23 செ.மீ., 17 செ.மீ., 8 செ.மீ.

(ii) 12 செ.மீ., 10 செ.மீ., 25 செ.மீ.

(iii) 9 செ.மீ., 7 செ.மீ., 16செ.மீ.

14) PQ = 4 செ.மீ .,QR = 6 செ.மீ.,PR = 7 செ.மீ., PS = 4.5 செ.மீ $\angle PQS = 40^0$ என்ற அளவுகள் கொண்ட PQRS நாற்கரம் அமைத்து அதன் பரப்பளவைக் காணவும்

15) AB =6 செ.மீ.,BC = 5.5 செ.மீ மற்றும் 0 அளவுகள் கொண்ட ABCD என்ற இணைகரம் அமைத்து அதன் பரப்பளவு காண்க

## பகுதி - இ

5 x 3 = 15

16) $\Delta ABC$, இல் $\angle A$ ஆனது $\angle B$ ஐ விட $24^o$ அதிகம். மேலும் $\angle C$ இன் வெளிக்கோணம் $108^o$ எனில் $\Delta ABC$.இன் கோணங்களைக் காண்க.

QUESTION BANK 365 https://www.qb365.in

17) படத்திலிருந்து x°, y° மற்றும் z° இன் மதிப்புகளைக் காண்க.




18) படத்தில் AB = BC = CD மற்றும் ∠A = x° எனில் ∠DCF = 3∠x என நிறுவுக.




19) கொடுக்கப்பட்ட அளவுகளைக் கொண்டு ABCD என்ற நாற்கரம் வரைந்து அதன் பரப்பளவைக் கணக்கிடவும்
AB = 7 செ.மீ , BC = 5 செ.மீ , AC = 6 செ.மீ , CD= 4 செ.மீ , மற்றும் <ACD = 45°..

20) கொடுக்கப்பட்ட அளவுகளைக் கொண்டு ABCD என்ற இணைகரம் வரைந்து அதன் பரப்பளவைக் கணக்கிடவும்
AB = 5.5 செ.மீ.,<DAB = $50^0$  BD = 7 செ.மீ

*****************************************

QB 365 QUESTION BANK 365 https://www.qb365.in